## மகாகவி பாரதியார் 143வது பிறந்த தினம்! தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும்

# இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கும் தொண்டு செய்த பாரதி வாழிய!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, டிச. 12-

'மொழி-நாடு-பெண் விடுதலை - பிற்போக்குத்தனங்கள் எதிர்ப்பு எனத் தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கும் தொண்டு செய்த பாரதி வாழிய' - என்று மகாகவி பாரதியார் அவர்களின் 143வது பிறந்த தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் புகழாரம் சூட்டியுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு



வருமாறு:-

**உய்வகை காட்டும் உயர் தமிழுக்குப் புதுநெறி காட்டிய புலவன்!**

**தமிழ்க்கவியில், உரைநடையில், தனிப்புதுமை படைத்த செந்தமிழ்த் தேனீ மகாகவி பாரதியார் அவர்களின் பிறந்தநாளில் அவரை வணங்குகிறேன்!**

**மொழி - நாடு - பெண் விடுதலை - பிற்போக்குத்தனங்கள் எதிர்ப்பு எனத் தமிழுக்கும் தமிழ்ச்சமூகத்துக்கும் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கும் தொண்டு செய்த பாரதி வாழிய!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட மாடல் ஆட்சியில்

# தொழில் வளர்ச்சி காரணமாக மின் நுகர்வு 8.5 சதவீதமாக உயர்வு!

## 'கரூர் யங் இந்தியன்' அமைப்புக் கூட்டத்தில் - அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!

கரூர், டிச.13 -

இந்திய அளவில் வருடாந்திர மின் நுகர்வு 5.7 சதவீதமாக உயர்ந்து வரும் நிலையில் தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியால் திராவிட மாடல் ஆட்சியில் தொழில் வளர்ச்சி காரணமாக 8.5 சதவீதமாக உயர்ந்து வருவதாக மின்சாரத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி கரூர் யங் இந்தியன் அமைப்பு கூட்டத்தில் பேசினார்.

கரூரில் யங் இந்தியன் அமைப்பின் சார்பில் நான்காம் ஆண்டு விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது:

கரூர் வேளாண்மை கல்லூரிக்கு புதிய கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் முதலமைச்சர் அவர்கள் பணியினை தொடங்கி வைப்பார்கள். முருங்கை பார்க் அமைப்பதற்கு தேவையான இடம் கட்டணம் இன்றி அரவக்குறிச்சி பகுதியிலேயே கொடுப்பதற்கு பணிகள் நடைபெற்று வருகிறது. ஐ .டி பார்க் கரூரில் அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்



டுள்ளார்கள். மாநகராட்சி பகுதியிலேயே ஐ.டி. பார்க் அமைக்க இடம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. கோவை கொடிசியா போல இங்கே உருவாக்க 5 ஏக்கரில் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. சிப்காட் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யும் பணிகள் இந்த மாதத்திற்குள் பூர்த்தி அடையும் . கரூர் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான அறிவிப்பை முதலமைச்சர் அவர்கள் அறிவித்து 40 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கி பணிகள் தொடங்கப்பட்ட நிலையில் பின்னர் சிலர் தடையாக உள்ளனர். நீதிமன்றத்தில் நமக்கு நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. நீதிமன்ற உத்தரவு கிடைக்கப்பெற்றதும் உடனடியாக புதிய பேருந்து நிலைய பணிகள் தொடங்கப்படும். கரூர் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைப்பதற்காக ஏறத்தாழ ரூ.400 கோடி அளவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிதி வழங்கியுள்ளார்கள். இந்த பணிகளும் விரைவில் தொடங்க இருக்கின்றன. நீண்ட காலமாக காமராஜ் மார்க்கெட் பழைய கட்டிடத்தில் இயங்கி வருவதால் புதிய கட்டிடம் கட்டும் பணி தொடங்கி நிறைவுபெறும் நிலையில் உள்ளது. வெங்கமேடு பகுதியில் புதிய மீன் மார்க்கெட் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது .

மகளிர் தங்கும் விடுதி கட்டுவதற்கான டெண்டர் முடிவடைந்து பழைய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் இருந்த இடத்தில் அமைய இருக்கின்றது. பழைய கட்டிடத்தை இடித்ததும் புதிய விடுதி கட்டும் பணிகள் தொடங்கப்படும்.

அரவக்குறிச்சியில் அரசு கலை அறிவியல் கல்லூரி இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. புதிதாக கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு புதிய கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற உள்ளது. தரகம்பட்டி அரசு கல்லூரியில் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. தொடர்ச்சியாக மாவட்டம் முழுவதும் தொடர்ந்து திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்டத்திற்கு தேவையான திட்டங்களையும் நிதிகளையும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் சி .இ ஆபீஸ் தற்போது திருச்சியில் உள்ளது. அந்த அலுவலகத்தை துறையரீதியாக கரூரில் ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டு வருகிறேன். நாமக்கல் கரூருக்கு அந்த அலுவலகத்தை கரூரிலேயே அமைக்கப்படும். 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெரூர் உண்ணியூர் பாலம் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. மூன்று தடுப்பணைகள் கட்டப்பட உள்ளன.

நான் அளித்த வாக்குறுதிகளை பட்டியல் போட்டு தினமும் அதை நான் பார்த்து நிறைவேற்றுவதற்காக பணியில் ஈடுபட்டு வருகிறேன். ஒரு பணி முடிந்ததும் மார்க் போட்டுக் கொள்வேன். மேட் இன் கரூர் என உலகம் முழுக்க தெரியும் அளவுக்கு ஒரு அடையாளத்தை உருவாக்க வேண்டும். சி.ஐ.ஐ. அமைப்பு அனைத்து சங்கங்களையும் ஒருங்கிணைத்து இந்த முயற்சியை எடுத்துச் செல்வது பாராட்டத்தக்கது. உங்களோடு நான் கரம் கோர்த்து செயல்பட்டு அரசினுடைய திட்டங்களை முதலமைச்சர் அவர்களின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு 100 மடங்கு உறுதியாக இருப்பேன். டெல்லியில் மின்சா ரத்துறை அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது.

இந்திய அளவில் சராசரியாக ஆண்டுக்கு 5.7 சத மின் நுகர்வு அதிகரித்து வருகிறது. ஆனால் தமிழ்நாட்டில் 8.5 சத மின் நுகர்வு அதிகரித்து வருகிறது. இதற்கு காரணம் முதலமைச்சர் மு.ஸ்டாலின் அவர்கள் எடுத்து வரும் தொடர் சீரிய முயற்சிகள் காரணமாக தமிழகத்தில் அதிக அளவில் புதிய தொழில்கள் தொடங்கப்பட்டு வருவதுதான்.

இந்த வருடாந்திர மின் நுகர்வு அதிகரிப்பு காரணத்தால் 5 வருடங்களில் 50 சத மின்சாரம் கூடுதலாக தேவைப்படும் இதற்காக தற்போதே தேவையான 20,000 மெகாவாட்டையும் தாண்டி, கூடுதலாக பத்தாயிரம் மெகாவாட் உற்பத்திக்கான திட்டங்களை முதல்வர் வகுத்து வருகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் செந்தில் பாலாஜி பேசினார்.



அரியலூர் மாவட்டம் செந்துறை வடக்கு ஒன்றியம் சார்பில் மருவத்தூர், சேடக்குடிகாடு ஆகிய கிராமங்களில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டம் ஒன்றியச் செயலாளர் வி.எழில்மாறன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் ஓசூர் பாரி, கழக இளம் பேச்சாளர் முத்துபாண்டி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சை தெற்கு மாவட்டம்,மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பா. இராமநாதன்,விவசாய அணி அமைப்பாளர் சுப்பிரமணியன், ஒன்றிய அவைத் தலைவர் எஸ்.ஆர். இளங்கோ ஆகியோர் முன்னிலையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டாக்டர் எஸ்.ஆர். சந்திரசேகர் நம்பிவயல் ஊராட்சி ஒன்றிய நடுநிலை மற்றும் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இனிப்பு மற்றும் குடைகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளின் மாநில மக்கள் தொடர்பு அலுவலர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வீர சரவணன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## சோ.துரை பாண்டியன் தலைமை! ஆர்.குமரேசன் ஒருங்கிணைப்பு!

# கோவை கவுண்டம்பாளையம் பகுதி 35வது வார்டில் போர்வெல் அமைப்பு!

## நா.சம்பத் எம்.சி. முன்னிலையில் நடைபெற்றது!

கோவை, டிச. 13 -

கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதிக்கு உட்பட்ட 35வது வார்டில், மின் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின் பேரில், மாவட்டச் செயலாளர் தோ.ஆ.ரவி ஆலோசனையின் பேரிலும், இளைஞர் அணி செயலாளரும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு, இடையர்பாளையத்தில் , கா.மருதமுத்து நினைவு முத்தமிழ் மன்றம் அருகில் உள்ள குறுக்கு சந்துகளில் நடந்த சாலை பணிகள் அமைக்கும் நிகழ்வு, அவைத் தலைவர் சோ. துரை பாண்டியன் தலைமையில், வட்டக் கழக செயலாளர், ஆர். குமரேசன் ஒருங்கிணைக்க 35 வது வார்டின் மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் முன்னிலையில் அனைவரும் கலந்து கொண்டனர் .

மாமன்ற உறுப்பினர் சம்பத் அவர்களின் விடா முயற்சியின் பேரில், பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, 20 வருட நெடுங்காலமாக சாலைகள் போடப்படாமல் இருந்ததை, கான்கிரீட் சாலைகளாக மாற்றப்பட்டு புதுமைப் பொலிவுடன் காணப்படுவதோடு, எங்கள் பகுதியில் புதிய கழிவுநீர் சாக்கடைகள், பொதுமக்களுக்கு உபயோகத்திற்காக சீரான குடிநீர் விநியோகம் மற்றும் குறிப்பிட்ட பகுதிகளில் போர்வெல் போடப்பட்டன போன்ற இவை அனைத்தும் 35 வது வார்டின் மாமன்ற உறுப்பினர் நா. சம்பத், பெரும் முயற்சியால் மாநகராட்சியின் நிதியிலிருந்து செய்து கொடுக்கப்பட்டன என்பதால், பொதுமக்கள் குறிப்பாக மகளிர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்து பாராட்டு தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து மகளிர்களுக்கும் மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் இனிப்புகள் வழங்கி, உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினம் உற்சாகமாக கொண்டாடப்பட்டது .



சேலம் மாநகரம் கிச்சிப்பாளையம் பகுதி தி.மு.க சார்பில். கழக இளைஞரணி செயலாளர். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்ததின பொதுக்கூட்டத்திற்கு பகுதி கழக செயலாளர். கே. ஜெய் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில். தலைமைக் கழக பேச்சாளர். நாஞ்சில் சம்பத். மாவட்டக் கழக செயலாளர். இரா. இராஜேந்திரன். இளம் பேச்சாளர் ரகுநாத். ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். விழாவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர். சி.ராஜேந்திரன்.மாநகர கழக நிர்வாகிகள். பா ரகுபதி. வி . கணேசன், எம்.எம். ஷெரீப், கோட்ட கழக செயலாளர்கள். ஜி. வெங்கடேசன், சத்யன்.செந்தில் சங்கர், ஆறுமுகம். பகுதி துணை செயலாளர்கள். மாது, பாலன்.நந்தகுமார். அண்ணாமலை. தனலட்சுமி சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கடந்த ஏழு வருடங்கள் மற்றும் நடப்பு ஆண்டில் EPFO மூலம்

# பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு?

## மக்களவையில் - தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 13 -

EPFO மூலம் முதலீடு குறித்து ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சரிடம் தென் சென்னை நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்வி எழுப்பினார்.

அதன் விபரம் வருமாறு:

அ.) ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) கடன் பத்திரம் மற்றும் பரிவர்த்தனை வர்த்தக நிதிகளில் பெரும் தொகையை முதலீடு செய்துள்ளது என்பது உண்மையா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள்:

ஆ.) கடந்த ஏழு வருடங்கள் மற்றும் நடப்பு ஆண்டில் EPFO மூலம் பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை மற்றும் முதலீடு செய்யப்பட்ட நிறுவனங்கள் அல்லது தயாரிப்பு பொருட்களின் விவரங்கள் ; மற்றும்

இ.) கடந்த ஐந்தாண்டுகளில் புளூ சிப் நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட மொத்த EPF



தொகையின் விவரங்கள் என்ன?

தமிழச்சி தங்கபாண்டியன் கேள்விக்கு, ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை இணையமைச்சர் செல்வி. ஷோபா கரந்தலஜே அளித்த பதில்கள்:

அ.) நிதிச் சேவைகள் துறை, நிதி அமைச்சகம், இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட முதலீட்டு முறையின்படி, 2015 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் தேதியிட்ட அறிவிப்பு எண் 11/14/2013-PR மூலம் அவ்வப்போது திருத்தப்பட்ட மற்றும் வழிகாட்டுதல்களின்படி அவ்வப்போது CBT, EPF நிதி முதலீடு செய்யப்படுகிறது. அதன்படி, EPFO, குறிப்பிட்ட முறைப்படி கடன் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வர்த்தக நிதிகள் இரண்டிலும் முதலீடு செய்துள்ளது. 31.03.2015 அன்று நடைபெற்ற EPF இன் மத்திய அறங்காவலர் குழுவின் 207வது கூட்டத்தின் ஒப்புதலின்படி, EPFO ஆகஸ்ட் 2015 முதல் எக்ஸ்சேஞ்ச் டிரேடட் ஃபண்டுகளில் முதலீடு செய்யத் தொடங்கியுள்ளது.

EPFO ஆல் நிர்வகிக்கப்படும் பல்வேறு நிதிகளின் மொத்த கார்பஸ் நிதி ரூ. 24.75 லட்சம் கோடி 31.03.2024 அன்று வரை.

கடன் முதலீடுகள் (இந்தியாவின் பொதுக் கணக்கில் வைத்திருக்கும் தொகை உட்பட) - 22,40,922.30 ETF முதலீடுகள் - 2,34,921.49

ஆ.) EPFO பங்குச் சந்தையில் எந்த தனிப்பட்ட பங்குகளிலும் நேரடியாக முதலீடு செய்வதில்லை. BSE- SENSEX மற்றும் NSE NIFTY-50 குறியீடுகளைப் பிரதிபலிக்கும் எக்ஸ்சேஞ்ச் டிரேடட் ஃபண்டுகள் (ETFs) மூலம் EPFO தொடர்ந்து ஈக்விட்டி சந்தைகளில் முதலீடு செய்கிறது. மேலும் EPFO, பாரத் 22 மற்றும் சிபிஎஸ்இ குறியீடுகளைக் கண்காணிக்கும் ப.ப.வ.நிதிகள் போன்ற நிறுவனங்களில் இந்திய அரசாங்கத்தின் பங்குகளை விலக்குவதற்காகக் கட்டமைக்கப்பட்ட ETF நிதிகளில் அவ்வப்போது முதலீடு செய்து வருகிறது.

EPFO கடந்த 7 ஆண்டுகளில் ETFக்களில் செய்துள்ள விவரங்களின் தரவு கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூ. கோடியில்) நிதி ஆண்டு = ETF முறையே, 2017-18 = 22,765.99, 2018-19 = 27,974.25, 2019-20 = 31,501.11, 2020-21 = 32,070.84, 2021-22 = 43,568.08, 2022-23 = 53,081.26, 2023-24 = 57,184.24, 2024-25 (அக்டோபர் 2024 வரை) = 34,207.93

இ.) ஈக்விட்டி பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட / பட்டியலிடப்படாத நிறுவனங்களின் பங்குகளில் EPFO விற்கு நேரடி முதலீடு இல்லை.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தெரிவித்தார்.



திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 4, பலவஞ்சிபாளையம் பகுதியில் உள்ள சமுதாய நலக் கூடத்தில் மாநகராட்சி சார்பில் ஃபெஞ்சல் புயல் நிவாரணப் பொருட்களை திருவண்ணாமலை மாவட்டத்திற்கு கொண்டு செல்லும் வாகனங்களை மாநகராட்சி மேயர், வடக்கு மாநகர செயலாளர் ந.தினேஷ்குமார், ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி ஆகியோர் கொடியசைத்து அனுப்பி வைத்தனர். இதில் துணை ஆணையாளர் சுந்தரராஜன், சுகாதார குழு தலைவர், 57வது வார்டு மாமன்ற உறுப்பினர் கவிதா நேதாஜி கண்ணன் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் பலர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜோதி பழனிசாமி

### டிசம்பர் 13 (2010)



**இருபத்தைந்து ஆண்டுகள் தாராபுரம் நகரக் கழகச் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றியவர்.**

**தாராபுரம் நகர்மன்ற உறுப்பினராகவும், தாராபுரம் நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும், நிலவள வங்கித் தலைவராகவும் பணியாற்றி மக்கள் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நெருக்கடி நிலை காலத்தில் 'மிசா' கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**